FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8213053

1. District மாவட்டம்: திருச்சிராப்பள்ளி PS: காவல்நிலையம்: ஊ.த.த.பிரிவு Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 15 Date: நாள் 10.11.202

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் - 1988 (amended in 2018) Sections பிரிவுகள்: 7(a) & 7(b)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : –

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 10.11.2023 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.40 hrs Time to : நேரம் வரை 15.30 hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.11.2023 Time : நேரம் 18.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 3 Km. வடக்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை கூட அலுவலக வளாகம், திருச்சி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ப. பிரேம் குமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பழனி

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 30.5.1972 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –

Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –

(f) Occupation : தொழில் மண்டல துணை வட்டாட்சியர் (g) Address : முகவரி திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

ரா. சுரேஷ்பாபு, வயது 56/2023, த/பெ. இராமலிங்கம் செயலாளர், திருச்சிராப்பள்ளி வேளாண்மை விற்பனைக்குழு

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– தாமதமில்லை –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 10/11/23

[signature] 10/11/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 10.11.2023.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. MANIKANDAN.
Rank: நிலை DSP. NIBCID / VAC, TRICHY.

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.15/2023–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான், இன்று 10.11.2023 பணியில் இருந்த போது மாலை 18.00 மணியளவில் திருச்சி திரு.ப.பிரேம்குமார், த/பெ பவுன், மண்டல துணை வட்டாட்சியர், திருச்சி மேற்கு, திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்கள் என்பவர் நிலையம் ஆஜராகி 10.11.2023ம் தேதி திருச்சிராப்பள்ளி, ஒழுங்குமுறை விற்பனை கூட வளாக கட்டிடத்தில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி ஒழுங்குமுறை விற்பனை கூடம் மற்றும் விற்பனை குழு அலுவலகத்தில் திடீர் சோதனை செயல் முறையின் படி நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அவர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் செயல் முறை(மகஜர்) விபரங்கள் பின்வருமாறு அனுப்புநர் ப.பிரேம்குமார், த/பெ.பவுன், மண்டல துணை வட்டாட்சியர், திருச்சி மேற்கு, திருச்சிராப்பள்ளி மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. அய்யா, பொருள்: திருச்சிராப்பள்ளி, வேளாண்மை விற்பனை குழு செயலாளர் அலுவலகம் – திடீர் சோதனை மேற்கொண்டது – தொடர்ச்சியாக – வேளாண்மை விற்பனை குழு செயலாளர் மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி... திருச்சி ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி ரகசிய தகவலின் அடிப்படையில், இன்று 10.11.2023ம் தேதி, முற்பகல் சுமார் 11.15 மணியளவில், திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திலிருந்து திருச்சி ஊ.த.க பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.G.மணிகண்டன் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு, திருச்சிராப்பள்ளி, வேளாண்மை விற்பனை குழு செயலாளர் அலுவலகத்தை முற்பகல் 11.50 மணிமுதல் 12.50 மணிவரை திடீர்சோதனை மேற்கொண்டு, மேற்படி திடீர் சோதனையின்போது தரைதளத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடம் கண்காணிப்பாளர் அறையில் சோதனையிடும்போது கண்காணிப்பாளர் திரு.குணசேகரனின் மேஜை டிராயரில் ரூ.5,000/– இருந்தது, அந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் திரு.குணசேகரன் தெரிவிக்காததால் துணை கண்காணிப்பாளரால் கைப்பற்றப்பட்டது. மேலும், வேளாண்மை விற்பனை குழு செயலாளர் திரு.சுரேஷ்பாபு அவர்கள் வைத்திருந்த ரூ.57,000/–ற்கு உரிய முகாந்திரம் தெரிவிக்காததால், காவல் துணை கண்காணிப்பாளர் திரு.G.மணிகண்டன் அவர்களால் ரூ.57,000/– கைப்பற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மேற்படி திரு.சுரேஷ்பாபு அவர்களை விசாரிக்கையில் தான் வேளாண் விளை பொருட்கள் விற்பனை செய்யும் இடைத்தரகர்கள்/வியாபாரிகளிடமிருந்து வசூல் செய்த பணம் தான் தற்காலிகமாக தங்யிருக்கும் எண்.FF7, CKP Apartment, TSA Nagar, கிராப்பட்டி திருச்சி

என்ற வீட்டில் வைத்திருப்பதாக தெரிவித்ததன் பேரில் வேளாண்மை விற்பனை குழு அலுவலகம் திருச்சியிலிருந்து பிற்பகல் 12.50 மணிக்கு நானும் துணை கண்காணிப்பாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு சுமார் பிற்பகல் 1.20 மணிக்கு அந்த வீட்டை அடைந்து, அங்கு சென்ற பிறகு மேற்படி திரு.சுரேஷ்பாபு அவர்கள் பீரோவிலிருந்து ஒரு பேக்கினை எடுத்து ஆஜர் செய்தார், அதனை நான் மற்றும் துணை கண்காணிப்பாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் மூலம் திறந்து பார்க்க அதில் ரூபாய் நோட்டுகள் கத்தை கத்தையாக இருந்தது, அதை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.8,80,000/– இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.சுரேஷ்பாபுவிடம் கேட்க அவர் எவ்வித விளக்கமும் கூறாததால், அப்பணம் கையூட்டு பணமாக இருக்கலாம் எனக்கருதி துணை கண்காணிப்பாளரால் மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. பின்பு மீண்டும் வேளாண்மை விற்பனை குழு அலுவலகம் திருச்சிக்கு வந்து நிகழ்வுகள் தொடர்பாக மகசர் ஒன்று 11.50 மணிமுதல் 15.30 மணிமுடிய தயார் செய்யப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் நடந்த சோதனையில் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் திரு.சுரேஷ்பாபுவின் வீட்டில் வைத்திருந்து கைப்பற்றப்பட்ட பணம் இவைகள் குறித்து திரு.சுரேஷ்பாபு அவர்கள் சரியான விளக்கம் எதுவும் கூறாததால் அப்பணம் கையூட்டு பணமாக இருக்கலாம், எனவே மேற்படி நிகழ்வுகள் குறித்து உரிய சட்ட நடவடிக்கையை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 10.11.2023ம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) இணைத்துள்ளேன். தங்கள் உண்மையுள்ள, Sd. 10/11/23 (ப.பிரேம்குமார்) திடீர் சோதனை செயல்முறை (மகஜர்) இன்று 10.11.2023 காலை 11.50 மணிக்கு திருச்சி, மதுரை ரோடு, பாலக்கரையில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி, ஒழுங்குமுறை விற்பனை கூட வளாக கட்டிடத்தில் முதல் தளத்தில் திருச்சிராப்பள்ளி விற்பனை குழு அலுவலகத்தில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யும் தானிய விளை பொருட்களை, வியாபாரிகளிடம் ஏலம் முறையில் விற்பனை செய்யும் போது கூ மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள், நேரடியாகவும், இடைத்தரகர்கள் மூலமாகவும் கையூட்டு கேட்டுப்பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில், திருச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது, அவர்களால் நியமிக்கப்பட்ட திரு.ப.பிரேம்குமார், த/பெ பவுன், மண்டல துணை வட்டாட்சியர், திருச்சி மேற்கு, திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்கள் தலைமையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.மணிகண்டன் மற்றும் அவரது குழுவினர் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து மடிக்கணினி மூலம் முதல் தளத்தில் உள்ள திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, செயலாளர் திரு.சுரேஷ்பாபு அவர்களின் அறையில் வைத்து தயார் செய்யப்படும் செயல்முறை நடவடிக்கை மகஜர்.

திருச்சி, மதுரை ரோடு, பாலக்கரை அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி, ஒழுங்குமுறை விற்பனை கூட வளாக கட்டிடத்தில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி ஒழுங்குமுறை விற்பனை கூடம் மற்றும் விற்பனை குழு அலுவலகத்தை இன்று 10.11.2023 காலை சுமார் 11.40 மணிக்கு கூஷ அலுவலர்கள் கூஷ ஒழுங்குமுறை விற்பனை அலுவலகத்தினை முன்னறிவிப்பின்றி திடீர் சோதனை செய்வதற்கு கூஷ ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தின் கேட் வழியாக உள்ளே நுழைந்து மேற்படி அலுவலகத்தின் பிரதான இரும்பு கேட் வழியாக உள்ளே நுழைந்தும் கூஷ அலுவலகத்தினை சுற்றி நான்கு திசைகளிலும் காவலர்களை பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டது. அலுவலகத்தின் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் உள்ள அனைத்து அறைகளுக்கும் காவலர்களை அனுப்பி பாதுகாப்புக்காக நிற்க செய்யப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் தரை தளத்தில் அமைந்துள்ள ஒழுங்குமுறை விற்பனை கூட அலுவலகத்தின் கண்காணிப்பாளர் மற்றும் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் திருச்சி விற்பனை குழு செயலாளர் மற்றும் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினரையும், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் நியமித்து அனுப்பப்பட்ட திருச்சி மேற்கு மண்டல துணை வட்டாட்சியர் திரு.பிரேம்குமார் அவர்களால் அறிமுகப்படுத்தி கொண்டும், அலுவலகத்தினை திடீர் சோதனை செய்ய வந்த விபரத்தை கூறியும் சோதனை தொடங்கப்பட்டது. தரைதளத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் பிரதான வாயில் உள்ளே நுழைந்து அங்கு பணியில் இருந்த அலுவலர்களிடமும், வராண்டாவில் நின்றிருந்த நபர்களையும் விசாரிக்க பின்வருமாறு விபரம் தெரிவித்தார்கள்

| வ.எண். | பெயர் மற்றும் விலாசம் | கையிருப்புத் தொகை |
|---|---|---|
| 1. | திரு.குணசேகரன் வயது 58/2023, த/பெ முத்துவீரன், கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனை கூடம், திருச்சி. | ரூ.130/– |
| 2. | திருமதி.கண்ணியம்மாள், வயது 27/2023, க/பெ முத்துராசா, இளநிலை உதவியாளர், ஒழுங்குமுறை விற்பனை கூடம், திருச்சி. | ரூ.270/– |
| 3. | திரு.உதயகுமார், வயது 57/2023, த/பெ தங்கராசு, மேற்பார்வையாளர், ஒழுங்குமுறை விற்பனை கூடம், திருச்சி. | ரூ.14700/– |
| 4. | திரு.விக்னேஷ் வயது 23/2023, த/பெ சுப்ரமணியன், வாட்ச்மேன், ஒழுங்குமுறை விற்பனை கூடம், திருச்சிராப்பள்ளி. | ரூ.120/– |
| 5. | திருமதி.ராஜலெட்சுமி, வயது 31/2023, க/பெ ரகுநாதன், மேற்பார்வையாளர், ஒழுங்குமுறை விற்பனை கூடம், திருச்சிராப்பள்ளி. | ரூ.1200/– |
| 6. | திருமதி.ஷோபா வயது 44/2023, க/பெ பாரத்குமார், மண்டி ஆய்வாளர், (தற்காலிக பணியாளர்) ஒழுங்குமுறை விற்பனை கூடம், திருச்சிராப்பள்ளி. | ரூ.2000/– |

மேற்படி பணம் பற்றி அவரவர்களை கேட்க, அந்த பணம் தங்களுடைய சொந்தப்பணம் என்றும், அந்த பணம் எடுத்தற்கான மினி ஸ்டேட்மெண்ட்டுடன் தெரிவித்ததால், மேற்படி பணம் அவர்களிடமிருந்து கைப்பற்றப்படவில்லை. மேலும் கண்காணிப்பாளர் திரு.குணசேகரன் அவர்களால் வசூல் செய்து வைத்திருந்த ரூ.3,201/—ஐ பற்றி விசாரிக்க அப்பணம் வியாபாரிகளிடம் இருந்து வசூலிக்கப்பட்ட மார்கெட் கட்டணத்தொகை எனவும், அதற்குரிய இரசீது எண்.17964 மற்றும் 17965 ஆகியவற்றினை காண்பிக்க அவை சரியாக இருந்ததால் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், கண்காணிப்பாளர் திரு.குணசேகரன் என்பவரின் இருக்கைக்கு எதிரே இருந்த மேஜைடிராயரில் இருந்த ரூ.5000/— குறித்து சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகையானது கையூட்டு பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் காவல் துணை கண்காணிப்பாளரால் கைப்பற்றப்பட்டது.

பின்னர், முதல் தளத்தில் இருந்த திருச்சிராப்பள்ளி விற்பனை குழு பிரதான அலுவலகத்தின் உள்ளே நுழைந்து அங்கு பணியில் இருந்த அலுவலர்களிடமும், வராண்டாவில் நின்றிருந்த நபர்களையும் விசாரிக்க பின்வருமாறு விபரம் தெரிவித்தார்கள்.

| வ. எண். | பெயர் மற்றும் விலாசம் | கையிருப்புத்தொகை |
|---|---|---|
| 1. | திரு.இரா.சுரேஷ்பாபு, வயது 56/2023,<br>த/பெ இராமலிங்கம், செயலாளர்,<br>திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.1400/= |
| 2. | திரு.சந்திரசேகரன், வயது 59/2023,<br>த/பெ பாலசுப்ரமணியன், இளநிலை உதவியாளர், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.270/= |
| 3. | திரு.கிருஷ்ணமூர்த்தி, வயது 49/2023<br>த/பெ கவப்பிள்ளை, ஆவண எழுத்தர்,<br>திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.170/= |
| 4. | திருமதி.அன்புசெல்வி, வயது 55/2023<br>க/பெ பெஞ்சமின், உரிம இட ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.160/— |
| 5. | திருமதி.பிரியா, வயது 30/23, க/பெ பரமசிவம், இளநிலை உதவியாளர், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.170/= |
| 6. | திருமதி.கண்மணி, வயது 52/2023<br>க/பெ சிவக்குமார்,<br>விளம்பர பிரச்சார கண்காணிப்பாளர், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.1050/— |
| 7. | திரு.ஜாய்பிளிக்ஸ், வயது 47/2023<br>த/பெ மெனுவேல்,<br>கண்காணிப்பாளர், மண்ணச்சநல்லூர் ஒழுங்குமுறை விற்பனை கூடம், மண்ணச்சநல்லூர், திருச்சி. | ரூ.690/= |
| 8. | திரு.சண்முகம், வயது 56/2023,<br>த/பெ ராமலிங்கம், அலுவலக உதவியாளர், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.29,160/= |

| | | |
|---|---|---|
| 9. | திருமதி.சிவரஞ்சனி, வயது 37/2023, க/பெ ராஜ்குமார், தலைமை கணக்கர், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.3,320/= |
| 10. | திருமதி.சுதா வயது, 39/2023, க/பெ லியோ போல்டு, இளநிலை உதவியாளர், பணிமைப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.220/– |
| 11. | திருமதி.சுகீதா வயது 32/2023, க/பெ மாயவேல், மேற்பார்வையாளர், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.610/– |
| 12. | திருமதி.ஜெரின்சுமிதா, வயது 28/2023, த/பெ சூசை, மேற்பார்வையாளர், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.820/– |
| 13. | திருமதி.திவ்ய பாரதி, வயது 31/2023, க/பெ பிரபு, மேற்பார்வையாளர், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.220/– |
| 14. | திருமதி.விஜயலெட்சுமி, வயது 57/2023, க/பெ வெங்கடேசன், அலுவலக உதவியாளர், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.1500/– |
| 15. | திரு.சதீஷ், வயது 37/2023, த/பெ சுகுமார், ஓட்டுனர், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.2300/– |
| 16. | திருமதி.அஸ்வினி ரத்னா, வயது 31/2023, க/பெ ரமேஷ்குமார், தட்டச்சர், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.15/– |
| 17. | திருமதி.சரண்யா, வயது 32/2023, க/பெ வீராச்சாமி, தட்டச்சர், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.100/– |
| 18. | திரு.விவின், வயது 30/2023, த/பெ தமிழ்செல்வன், இளநிலை உதவியாளர், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, திருச்சிராப்பள்ளி. | ரூ.670/– |

மேற்படி பணம் பற்றி அவரவர்களை கேட்க, அந்த பணம் தஙகளுடைய சொந்தப்பணம் என்றும், அந்த பணம் எடுத்தற்கான மினி ஸ்டேட்மெண்ட்டுடன் மேற்படி பணம் அவர்களிடமிருந்து கைப்பற்றப்படவில்லை.

மேலும், திருச்சிராப்பள்ளி விற்பனை குழு செயலாளர் திரு.சுரேஷ்பாபு அவர்களின் அறையினை சோதனை செய்ததில் அவரது இருக்கைக்கு எதிரே இருந்த மேஜையின் வலதுபக்க டிராயரை சோதனை செய்த போது, அதில் 500 ரூபாய் நோட்டு கத்தைகளாக ஒரு கட்டு இருந்தது. அதனை எடுத்து ஆய்வுகுழு அலுவலரால் நியமிக்கப்பட்ட திருச்சி மேற்கு மண்டல துணை வட்டாட்சியர், திரு.பிரேம்குமார் அவர்கள் மூலம் எண்ணிப்பார்க்க அதில் 114 எண்ணிக்கையிலான 500 ரூபாய் நோட்டுகள் இருந்தது ஆக கூடுதல் ரூ.57000/– ஆகும். அது குறித்து திரு.சுரேஷ்பாபு அவர்களிடம் கேட்க எவ்வித பதிலும் தெரிவிக்காமல் தலையை குனிந்து அமைதியாக இருந்ததால் அப்பணம் விவசாய வேளாண் விளைபொருட்களை ஏலம் எடுக்கும் வியாபாரிகளிடம் இருந்து பெற்று வைத்திருந்த கையூட்டு பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம்

ரூ.57,000/—த்தை காவல் துணை கண்காணிப்பாளர் திரு.மணிகண்டன் அவர்களால் இந்த திடீர் சோதனையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலும், திரு.சுரேஷ்பாபுவிடம் வியாபாரிகளிடம் ஏலம் முறையில் விளை பொருட்கள் விற்பனை செய்யும் போது இடைத்தரகர்கள் மூலமாகவும் கையூட்டு கேட்டுப்பெறுவது தொடர்பாக விசாரணை செய்ய, விவசாய வேளாண் விளைபொருட்களை ஏலம் எடுக்கும் வியாபாரிகளிடம் இருந்து கடந்த ஒரு வாரமாக வசூல் செய்த பணம் தனது வீட்டில் வைத்திருப்பதாகவும் தன்னை அழைத்து சென்றால் எடுத்து தருகிறேன் என்று தெரிவித்ததன் பேரில், அவரது வீட்டிற்கு அரசு வாகனத்தில் 12.50 மணிக்கு புறப்பட்டு செல்வதால் மகஜர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. பின்னர், அவர் வசித்து வரும் எண்.FF7, CKP அப்பார்ட்மெண்ட், TSA நகர், கிராப்பட்டி, திருச்சி என்ற முகவரியில் உள்ள வீட்டிற்கு சுமார் 13.20 மணிக்கு சென்று அங்கு சுரேஷ்பாபு அவரது படுக்கையறையின் உள்ளே சென்று அங்கிருந்த ஸ்டீல் பீரோவில் உள்ளிருந்த மெருன்கலர் பேக்கினை கொண்டு வந்து ஆஜர் செய்ததை ஆய்வுகுழு அலுவலரால் நியமிக்கப்பட்ட திருச்சி மேற்கு மண்டல துணை வட்டாட்சியர் திரு.பிரேம்குமார், காவல் துணை கண்காணிப்பாளர் திரு.மணிகண்டன் மற்றும் குழுவினர்கள் மூலம் திறந்து பார்க்க அதில் 500, 200 மற்றும் 100 ரூபாய் நோட்டுகள் கத்தையாக இருந்ததை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.8,80,000/— (ரூபாய் எட்டு இலட்சத்து எண்பதாயிரம்) இருந்தது மேற்படி பணம் லஞ்ச பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அப்பணம் ரூ.8,80,000/—த்தை கைப்பற்றப்பட்டது. பின்னர், சுமார் 13.30 மணிக்கு அவரது வீட்டில் இருந்து புறப்பட்டு மேற்படி அலுவலகத்திற்கு 13.50 மணிக்கு வந்து நிறுத்தப்பட்ட மகஜர் தொடரப்பட்டது. மேற்படி, தரைதளம் மற்றும் முதல் தளத்தில் இருந்த இரண்டு அலுவலகத்திலும் பராமரிக்கப்படும் ஆவணங்கள் பற்றி கேட்க தரைதளத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூட அலுவலகத்தில் இருந்து பின்வரும் ஆவணங்களான (1) பணப்பதிவேடு 05.11.2023 முதல் 08.11.2023 வரை பதிவுகள் உள்ளது (4 தாள்கள் கொண்டது), (2) வருகைப்பதிவேடு ஏப்ரல் 2023 முதல் 10 நவம்பர் 2023 வரையில் பதிவுகள் உள்ளது(9 தாள்கள் கொண்டது), (3) திருச்சிராப்பள்ளி விற்பனை குழு, பண வரவு ரசீது புத்தகம், புத்தகம் எண்.A180 (4 தாள்கள் கொண்டது) ஆகிய ஆவணங்களையும் மற்றும் முதல் தளத்தில் உள்ள திருச்சிராப்பள்ளி விற்பனை குழு அலுவலகத்தில் இருந்து பின் வரும் ஆவணங்களான (1) திருச்சிராப்பள்ளி விற்பனை குழு ரொக்கப்புத்தகம் (18 பக்கங்கள் கொண்டது), (2) திருச்சிராப்பள்ளி விற்பனை குழு தலைமை அலுவலக நவம்பர் மாத வருகைப்பதிவேடு (4 தாள்கள் கொண்டது), (3) திருச்சிராப்பள்ளி விற்பனை குழு தலைமை அலுவலக மாற்றுபணி 2023 செப்டம்பர் முதல் நவம்பர் வரையிலான வருகைப்பதிவேடு (4 தாள்கள் கொண்டது) ஆகிய ஆவணங்களை ஒளி நகல் எடுத்து உண்மை நகல் என சான்றொப்பம்

பெற்று இந்த திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக காவல் துணை கண்காணிப்பாளர் திரு.மணிகண்டன் அவர்களால் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை பிற்பகல் **15.30** மணிக்கு முடிக்கப்பட்டது. Submitted to the Court of the Hon'ble Special Judge for the P.C. Act 1988 Cases Trichy:- Received this report at 18.00 hrs on 10.11.2023 and registered a Case in Trichy V&AC Cr.No.15/2023 u/s 7(a) and 7(b) of P.C. Act 1988 (as amended 2018) at 1900 hrs on 10.11.2023. (Sd) G.MANIKANDAN, DSP, V&AC, Trcihy.

10/11/23
G.MANIKANDAN
DSP. V&AC.
TRICHY.